# டாபிந்து

பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது

ஆரம்பம் 1984

மலர் 39 | இதழ் 02 | 2022 கார்த்திகை மாத பதிப்பு


# பெண்களுக்கு எதிராக அனைத்து முறைகளிலும் மேற்கொள்ளப்படும் வன்முறையை நிறுத்தும் சர்வதேசதினக் கொண்டாட்டம் 2022




ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் 25ம் திகதி, அதாவது சர்வதேச மனித உரிமைகள் தினம் வரை பெண்களுக்கு எதிராக அனைத்து வழிகளிலும் மேற்கொள்ளப்படும் வன்முறைகளை நிறுத்தும் சர்வதேச தினமாக அழைக்கப்படுகின்றது.

பெண்களுக்கு எதிரான அனைத்து வன்முறைகளையும் ஒழிக்கும் சர்வதேச தினமானது டாபிந்து கூட்டமைப்பினால் 2022ம் ஆண்டு மார்கழி மாதம் 4ம் திகதி வவுனியாவில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்விற்கு மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தி சிவில் அமைப்பின் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் டாபிந்து கூட்டமைப்பின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

2ஆம் பக்கம் பார்க்க...

## உள்ளே!


| | | |
|---|---|---|
| பக்கம் 03 | - | பெண் வன்முறைக்கு எதிரான நாள் |
| பக்கம் 04 | - | சிவில் சமூக அமைப்பு மற்றும் தொழிற்சங்க குழுக்களுடன் ஐக்கிய இராச்சியத்தில் முன்னெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் கூட்டம் |
| பக்கம் 05 | - | காணாமலாக்கப்பட்டு 38 வருடங்கள் / ஆரோக்கியம் |
| பக்கம் 06-08 | - | எமது பணி |
| பக்கம் 09 | - | வெளிநாட்டுச் செய்தி |
| பக்கம் 10 | - | எமது எண்ணம் |
| பக்கம் 11 | - | கவிதை மழை |

## வியர்வைத்துளி கூட்டமைப்பு

221, வெலபட வீதி, கட்டுநாயக்க.
தொ.பே: 011 4 851 383
மின்னஞ்சல்: dabindu.infoco@gmail.com
முகநூல்: dabindu collective sri lanka:


# பல்வேறு நெருக்கடிகளுக்கு தூண்டுதலாக இருந்த வரவு செலவுத் திட்டம்

சமூக, பொருளாதார மற்றும் அரசியல் வீழ்ச்சிக்கு மத்தியில் இம்முறை முன்வைக்கப்பட்ட ஜனரஞ்சக வரவுசெலவுத் திட்டமானது, திட்டமிடும் சிறுபான்மையானோரின் பலத்தை மேலும் உறுதிப்படுத்துவதற்காகவும், பெரும்பாலானோர் வறுமையின் படுகுழிக்கு தள்ளப்படுவதன் காரணமாகவும் மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் மேலும் தெளிவுப்படுத்தப்படும் விடயம் யாதெனில் அத்தியாவசிய சேவைகளாக கருதப்படும் சுகாதார சேவைப் பகுதிக்கு 322 மில்லியன் டொலர்களும், கல்விக்கு 232 மில்லியன் டொலர்களும் வேறுபடுத்தி மற்றும் போர் நிறுத்தம் முடிந்து ஓர் தசாப்தத்திற்கு மேலான போதும், பாதுகாப்பு பிரிவுக்கு 539 டொலர் மில்லியனும் வேறுபடுத்தப்பட்டது. பாதுகாப்புப் படையினருக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் இப் பணத்தில் பொது மக்களின் பாதுகாப்புக் கருதி, சதத்தினால் பணம் செலவழிப்பதுடன், உயரடுக்கு பாதுகாப்பிற்காக கோடிக்கணக்கான பணம் செலவழிக்கப்பட்டுள்ளது.

74 வருட வறுமையை இல்லாதொழிப்பதாக கூறிக் கொண்டு ஆட்சிக்கு வந்த அனைத்து அரசாங்கமும் வறுமையை தொடர்ச்சியாக தக்கவைத்துக் கொள்வதற்காக மேற்கொண்ட முயற்சியினால் பாதிக்கப்பட்டு, ஆதரவின்றி இருக்கும் ஏழை மக்கள் இந்நிலைமையிலிருந்து மீள்வதற்காக போதைப்பொருள் விற்பனை, களவு மற்றும் மோசடிக்கு தூண்டப்பட்டுள்ளது.

நடமாடும் வியாபாரி முதல் சில்லறை வியாபாரி வரை வரிவிதிப்பதனால் மூன்று பிரதான உணவு வேளைகளின் ஒரு உணவு வேளையையாவது பூர்த்தி செய்வதற்கு முடியாத நிலைக்கு வறியவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். ஆனால் பொருளாதார குற்றவாளிகள் எந்தவொரு தண்டனையையும் பெறாமல் அரச சலுகைகளை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

தற்போது மாணவர்கள் கல்வியை கைவிடுவதற்கும். அறிஞர்கள் மற்றும் திறன்மிக்க இளைஞர் கூட்டம் நாட்டை விட்டு செல்வதற்கும், உற்பத்திப் பிரிவின் செலவு, மின்வெட்டு, எரிபொருள் தட்டுப்பாடு என்பவற்றால் ஆடைத் தொழிலில் ஏற்பட்ட வீழ்ச்சியும் கடும் பொருளாதார நெருக்கடிக்குள்ளாவதற்கு காரணமாக இருந்தது.

அனைத்து தொழில்பிரிவுகளும் ஓர் பயனுள்ள கண்டுபிடிப்புகளுக்கு உட்படுத்தி விசேடமாக, நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும்பாலான வகிபாகத்தை வழங்கும் பெண்களின் உழைப்பு தொடர்பான நியாயமான தலையீட்டிற்கு அரசாங்கம் முயற்சியை மேற்கொள்ளவில்லை.

தற்போது கிட்டத்தட்ட 100மில்லியன் டொலர் கடன் சுமையை தாங்கும் இலங்கையின் வரவுசெலவு பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கு மற்றும் கட்டண மீதியை ஈடுசெய்வதற்கு தேவையான மாற்று பொருளாதார நடவடிக்கையை அறிமுகப்படுத்துவதற்கு எந்தவொரு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. இறுதியில் கடன்சுமை மற்றும் வரிச்சுமையை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வறியவர்களே தாங்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பல தசாப்தங்களாக வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக பெற்றுக் கொண்ட கடன் பணத்தினால் நாடு முன்னேறவில்லையென்றால், பெற்றுக் கொண்ட கடன் பணத்தின் மூலம் மேற்கொண்ட அபிவிருத்தி தான் என்ன?

அடிப்படை மனித உரிமைகளான உணவு, சுகாதாரம், கல்வி ஆகிய பகுதிகளுக்கு குறித்த ஒரு தொகையினை வரவுசெலவுத்திட்டத்திலிருந்து ஒதுக்கீடு செய்யாமையினால் மக்களின் மகிழ்ச்சி மற்றும் குதூகலத்தை இழக்கச் செய்து அவர்களை விரக்திக்கு ஆளாக்கியுள்ளனர்.

1ஆம் பக்கத் தொடர்ச்சி **பெண்களுக்கு எதிராக...**

வவுனியா பிரதேசத்தில் மிகவும் சிறப்புற இடம்பெற்ற அமைதிப் போராட்டத்தின் பின்னர் கிறீன்பார்க் மண்டபத்தில் நூற்றுக்கும் அதிகமான மக்களுடன் இவ்விழா இனிதே இடம்பெற்றது.

எமது அழைப்பையேற்று,பிரதான உரைக்காக வருகைதந்த பெண் ஒத்துழைப்பு தொடர்பில் நல் அனுபவம் மிக்க புத்தளம் மாவட்டத்தின் முன்னாள் மாகாண சபை உறுப்பினரான பிசிலியா பூட்டோ அவர்கள் கலந்துகொண்டு தமது கருத்துக்களை முன்வைத்ததுடன், பெண் என்பவள் துணிவு பொருந்தியவளாகையால், தனது பிரச்சினைக்காக தாமாகவே எழுந்து நிற்க வேண்டும் எனவும். அதற்கு பொருத்தமான சட்ட விதிகள் ஒழுங்கமைக்கப்பட வேண்டும் எனவும் உரையாற்றினார்.

இங்கு கட்டுநாயக்க, பியகம, வவுனியா மற்றும், கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களை பிரதிநிதித்துவப்படுத்தி வருகைதந்த எமது உறுப்பினர்கள், வேலை உலகினுள் இடம்பெறுகின்ற துன்புறுத்தல்கள் மற்றும் வன்முறைகள் தொடர்பாக தத்தமது அனுபவப்பகிர்வினை சபை முன்னிலையில் முன்வைத்தனர்.

வவுனியா பொலிஸ் நிலையத்தை பிரதிநிதித்துவப்படுத்தி சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவின் பிரதான அதிகாரியும், பிரதேச செயலகத்தின் பெண் விவகார அதிகாரியும் மற்றும் சிவில் அமைப்பை பிரதிந்தித்தவப்படுத்தி வருகைதந்தவர்களும் கூறிநின்ற விடயம் யாதெனில், இனிவரும் காலத்தில் அனைவரும் ஒன்றிணைந்து இப்பிரச்சினையை தீர்க் வேண்டும் என்பதே ஆகும்.

அன்றைய நிகழ்வை மேலும் சிறப்பாக்குவதற்காக எமது உறுப்பினர்கள் கலை நிகழ்வுகளையும் நிகழ்த்தினார்கள்.



# பெண் வன்முறைக்கு எதிரான நாள்

ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் 25ம் திகதி பெண்களுக்கு எதிரான வன்முறையை நிறுத்தும் சர்வதேச தினமாக உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. இது 16 நாட்களுக்கு நினைவுகூறப்பட்டு வருகின்றது. இந்த 16 நாட்களிலும் பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுவதுடன், ஒவ்வொரு ஆண்டும் 25ம் திகதியன்று பெண்களுக்கு எதிரான வன்முறை தினத்தின் மூலம், 25ம் திகதியானது செயற்றிட்டத்தின் ஆரம்க நாளாகவும், மார்கழி மாதம் 10ம் திகதியானது சர்வதேச மனித உரிமைகள் தினமன்று இச்செயற்றிட்டத்தின் இறுதி நாளாகவும் கருதப்பட்டு கொண்டாடப்பட்டு வருகின்றது. அதன் இவ்வருட கருப்பொருளாக, ஒன்றிணையுங்கள்! பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கு எதிரான வன்முறையை முடிவுக்கு கொண்டுவருவோம் என்பதாகும். பெண்களுக்கு எதிரான பாகுபாடு மற்றும் துன்புறுத்துதலானது வீட்டில் மற்றும் தொழில்செய்யும் இடம் போன்ற அனைத்து இடங்களிலும் காணக் கிடைக்கின்றது. அவ்வாறு நடைபெறுகின்ற வன்முறை செயற்பாடுகள் வீட்டிலும், சமூகத்திலும் மற்றும் அரசாங்க ரீதியிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

- குடும்பத்தில் இடம்பெறும் துன்புறுத்தல்களாக : வீட்டு வன்முறை, இரத்த உறவுமுறைகளுக்கிடையில் நடைபெறும் பாலியல் ரீதியான உடலுறவு, திருமண பலாத்காரம் போன்றவற்றை குறிப்பிடலாம்.
- சமுதாயத்தில் நடைபெறும் துன்புறுத்தலாக பாலியல் தாக்குதல், பெண் துஷ்பிரயோகம், பாலியல் துன்புறுத்தல், விபச்சாரத் தொழில், கருக்கலைப்பு போன்றவற்றை குறிப்பிடலாம்.
- அரசாங்கத்தினுள் இடம்பெறும் வன்முறையாக பாலியல் இலஞ்சம் பெற்றுக் கொள்ளுதல், தொழில் செய்யும் இடத்தை மாற்றுதல், உளரீதியான துன்புறுத்தல், வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்களுக்கு முறையான பாதகாப்பு வழங்காமை போன்ற விடயங்களை வன்முறை மற்றும் துன்புறுத்தல் எனலாம்.

இவ்வாறு பல்வேறு திருப்பத்தை பெறும் வன்முறை சட்ட கட்டமைப்பிற்குள் எவ்வகையான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன என்பது பற்றி தேடிப்பார்ப்பது மிக முக்கியமாகும். 1995ம் ஆண்டு 22ம் இலக்கத்தையுடைய தண்டனை சட்டதிருத்த கட்டளையின் மூலம் பெண்கள் மற்றும் சிறுவர் உரிமைகள் தொடர்பான தேசிய மாநாட்டிலுள்ள ஏற்பாடுகள் அனைத்தும் அரசியலமைப்பிற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது. அங்கு 345ம் அதிகாரத்தினூடாக பாலியல் துன்புறுத்தலுக்கு எதிரான விதிகள் தண்டனையினூடாக மேற்கொள்ளப்படுகின்றன. 1994ம் ஆண்டு 22ம் இலக்கத்தையுடைய துன்புறுத்தலுக்கு எதிரான கட்டளையினூடாக ஐக்கிய மக்களின் துன்புறுத்தலுக்கு எதிரான மாநாட்டின் மூலம் ஐ.நா வின் துன்புறுத்தலுக்கு எதிரான மாநாடு தேசிய சட்டத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 1978ம் ஆண்டு அரசியலமைப்பின்படி, சில மனித உரிமைகள் அடிப்படை உரிமைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வுரிமையினூடாக ஆண்-பெண் சமூகத்தன்மை மற்றும் பிணைக்கப்பட்ட உரிமைகள் ஆகிய இரண்டையும் காணக் கிடைக்கின்றது. அதாவது, 12ம் அரசியலமைப்பினூடாக காண்பிக்கப்பட்டுள்ள சமத்துவம் மற்றும் 11ம் அரசியலமைப்பினூடாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கடூர அவமானம், சித்திரவதை மற்றும் அக்கறைக்கு உள்ளாகாமல் இருக்கும் உரிமையாகும். மேலும் 12 (2) அரசியலமைப்பினூடாக ஆண்-பெண் சமூகத்தன்மையின் மீது எவரும் எந்தவொரு வேறுபாடும் காண்பிக்க் கூடாதென அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

9ஆம் பக்கம் பார்க்க...



# சிவில் சமூக அமைப்பு மற்றும் தொழிற்சங்க குழுக்களுடன் ஐக்கிய இராச்சியத்தில் முன்னெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் கூட்டம்



தற்கால பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் ஆடைத்தொழிற்சாலையின் நிலைமை தொடர்பாக கலந்துரையாடுவதற்காக Wor on Want அமைப்பின் அழைப்பின்பேரில், அந்நாட்டு தொழிற்சங்கங்களின் தலைவர்கள் உட்பட குழுவொன்று கடந்த நவம்பர் மாதம் இலங்கைக்கு வருகை தந்தனர். அரச தரப்பினரைப் போன்று தொழிற்சங்க செயற்பாட்டாளர்களையும் சந்தித்த அக்குழு சுதந்திர வர்த்தக வலயத்தின் தொழில் தரப்பினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் டாபிந்து கூட்டமைப்பு உட்பட பெண் தலைமைத்துவத்தின் கீழ் செயற்படும் தொழிற்சங்க அமைப்புக்களுடனும் சந்திப்பை மேற்கொள்வதற்கு அவர்கள் வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டனர்.

தொழிற்சாலைகளில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் வருகை தந்த கூட்டமைப்புக்களினூடாக முன்வைக்கப்பட்டதுடன், இனிவரும் காலங்களில் சர்வதேச ரீதியான ஒத்துழைப்புடன் எவ்வாறு செயற்படுவது என்பது பற்றி இங்கு மேலும் கலந்துரையாடப்பட்டது. இங்கு விசேடமாக தொழிற்சங்கங்கள் முகங்கொடுக்கின்ற பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன், ஐக்கிய இராச்சியத்தின் பிததிநிதிகளுடன் முறைசாரா கலந்துலையாடலும் இடம்பெற்றது.



# காணாமலாக்கப்பட்டு 33 வருடங்கள்...

லயனல் ரஞ்சித் அவர்கள் காணாமலாக்கப்பட்டு இவ்வருடத்துடன் 33 வருடங்கள் முழுமையடைந்துள்ளது. அவர்களுக்கான நினைவு தின கொண்டாட்டமானது 2022.10.27ம் திகதி காணாமலாக்கப்பட்டோரின் குடும்ப ஒன்றியத்தின் ஒழுங்கமைப்படன் ரத்தொழுகமவில் அமைந்துள்ள காணமலாக்கப்பட்டோரின் நினைவுச்சின்னத்திற்கு அருகில் நினைவுகூறப்பட்டது.

வலயத்தின் தொழிலாளர்களின் பிரச்சினைக்காக முன்னின்ற மனிதர்களாக அவர்களை அறிமுகப்படுத்தலாம். வர்த்தக வலயத்தில் அமைந்துள்ள ஃப்ளோரல் கிரின்ஸ் நிறுவனத்தில் தொழில்புரிந்த ரஞ்சித் அவர்கள் அந்நிறுவனத்தில் தொழிலாளர்கள் முகங்கொடுக்கும் பல்வேறு தொழில்துறை விபத்துக்களைப் போன்று அவர்களுக்கு உரித்தாகவிருந்த கொடைகளும் கிடைக்காமையினால் ஆட்சியாளர்களுடன் மோதல் ஏற்பட்டது. நிறுவனத்தினுள் நடைபெற்ற பிரச்சினை தொடர்பாகவும், அவர்கள் டாபிந்து பத்திரிகைக்கு வெளியிட்டார்கள். இதன்மூலம் பொய்யான சர்ச்சைக்குள் அகப்பட்டு அவர்களின் தொழிலும் இரத்து செய்யப்பட்டதுடன், உள்நாட்டு பரிசோதனைக்கும் உட்படுத்தப்பட்டது. இப்பரிசோதனை நிறைவுபெறுகையில் அவர் காணாமலாக்கப்பட்டார்.

வலயத்தினுள் நடைபெறும் அசாதாரணங்களுக்கு எதிரான சட்ட ஆலோசணைகளுக்கு மற்றும் சட்ட உதவியானது, லயனல் அவர்களினால் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டது. இச் செயற்றிட்டத்தை வெற்றிகரமாக நிறைவுபெற்றதுடன், ரஞ்சித் சகோதரருக்கும் நியாயம் வழங்கப்பட்டது. ரஞ்சித் அவர்களின் உட்சோதனை பரிசீலனை நிறைவுற்று வரும்போது, லயனல் சகோதரரும் ரஞசித் சகோதரருடன் காணாமலாக்கப்பட்டிருந்தார்.

2022.10.27ம் திகதியன்று நடைபெற்ற 33வது நினைவுதின கொண்டாட்டத்தில் கருத்துக்கள் தெரிவித்ததுடன், ஜயந்தி தன்தெனிய அவர்கள் மூலம் கூறப்பட்ட விடயம் யாதெனில், காணாமலாக்கப்பட்டு மூன்று தசாப்தங்கள் கடந்த போதிலும் இதுவரை அது தொடர்பாக மேற்கொண்ட வழக்கு தொடர்பில் எந்தவொரு பதிலும் கிடைக்கப்பெறவில்லை என குறிப்பிட்டார். அத்தோடு இன்னும் அவர்களுக்காக இறப்பு சான்றிதழும் கிடைக்கப்பெறவில்லை.

# ஆரோக்கியம்

# உலக எயிட்ஸ் தினம்

உலக எயிட்ஸ் தினம் 1988ம் ஆண்டு முதல் கடைபிடிக்கப்பட் வருகின்றது. ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதம் 1ம் திகதி உலகெங்கும் உள்ள மக்கள் ஹெச்.ஐ.வியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக இருக்க எயிட்ஸ் தினம் கொண்டாடப்படுகிறது. உலகளவில் மருத்துவர்களை அச்சுறுத்தி வரும் நோயில் முதன்மையானது இந்த எயிட்ஸ் நோயாகும். பால்வினை நோய் என்று சொல்லப்பட்டாலும் இந்த நோய்க்கு மட்டும் மருந்துகள் இல்லை என்றே சொல்லலாம். ஹெச்.ஐ.வி. நோய் நிலைமையானது, அந்நோய் ஏற்பட்ட ஆரம்ப சந்தர்ப்பத்திலேயே அடையாளம் கண்டு அதற்கு சிகிச்சைகள் மேற்கொள்ள முடியும். மாறாக சிகிச்சை பெறாத நபர்களுக்கு எயிட்ஸ் நோய்த்தொற்று ஏற்பட வாய்ப்புண்டு. இது ஓர் கொடிய நோயாகும்.

**ஹெச்.ஐ.வி நோயானது பரவும் சந்தர்ப்பங்கள்.**

- பாதுகாப்பற்ற உடலுறவு
- நோய் பீடிக்கப்பட்ட தாயிடமிருந்து குழந்தைக்கு.
- பாதுகாப்பற்ற கருவிகள் பயன்பாடு.
- இரத்த தானம் மற்றும் உடல் உறுப்புக்கள் தானம் ஹெச்.ஐ.வி நோய் பரவாத சந்தர்ப்பங்கள்.
- நுளம்புக்கடித்தல்
- மலசலகூட பாவனை
- கட்டியணைத்தல்.
- உணவு உண்பதற்கு பயன்படுத்தும் கருவிகள்
- தொடுகை

**ஹெச்.ஐ.வி தொற்று அவதானத்தை கட்டுப்படுத்துவது எவ்வாறு?**

- ஒருவருடன் மற்றும் உடலுறவு கொள்ளுதல்.
- உடலுறவு கொள்ளும்போது பாதுகாப்பான முறைகளை கடைபிடித்தல்.
- முறையான சிகிச்சைகளை மேற்கொள்ளுதல்.

**ஹெச்.ஐ.வி நோய் பரிசோதனைகளை எவ்வாறு மேற்கொள்ளலாம்?**

- உங்களது தனிப்பட்ட வைத்தியரை நாடிச்செல்வதன் மூலம்.
- இலங்கை முழுவதும் இலவசமாக நடைபெறும் பாலியல் மருத்துவ முகாம்களில் பரிசோதனையை மேற்கொள்ள முடியும்.

சுரம்யா

(இணையத்தினூடாக எடுக்கப்பட்டது)



# உளநல ஆரோக்கியத்திற்கான ஆலோசணை செயற்றிட்டம்.

சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழில்புரியும் பெண்களுக்காக டாபிந்து கூட்டமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஆலோசணை செயலமர்வுகளின் இறுதி அமர்வு கடந்த ஐப்பசி மாதம் 9ம் திகதி பியகமவிலுள்ள சுதந்திர வர்த்தக வலயத்தை மையமாகக் கொண்டு இடம்பெற்றது. இங்கு வள ஏற்பாட்டாளராக குழந்தைகள் மற்றும் பெண் பணியகத்தில் சமூக அதிகாரப்படுத்தல் பிரிவில் உளவியல் ஆலோசகராக பணிபுரியும் திருமதி. பிரதீபா விக்கிரமசிங்ஹ அவர்கள் கலந்து கொண்டார். இது தனிமனித செயற்றிட்டமாக இடம்பெற்றதுடன், தொழிற்துறையில் ஈடுபடும் ஐவர் இதில் கலந்து கொண்டனர். இதில் பங்குபற்றியவர்கள் தமது உளநல ஆரோக்கியத்திற்கு இச்செயற்றிட்டம் மிகவும் பயனுள்ளதாக இருந்தது என தெரிவித்தனர்.

# அணிதிரட்டல் செயற்றிட்டம்

டாபிந்து கூட்டமைப்பினால் வடக்கில் ஆடைத்தொழிற்சாலை தொழிலாளர்களை வலிமைப்படுத்தல் மற்றும் ஒன்றிணைக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட முதலாவது அணிதிரட்டல் செயற்றிட்டமானது ஐப்பசி மாதம் 29ம் மற்றும் 30ம் திகதிகளில் கிளிநொச்சியில் இடம்பெற்றது. இதற்காக கிளிநொச்சி மற்றும் வவுனியா போன்ற மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பதினைந்து இளம் பெண்கள் கலந்துகொண்டனர். அங்கு அவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் மற்றும் தொழிலாளர் உரிமைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. இச்செயற்றிட்டத்திற்கு வள ஏற்பாட்டாளராக கே.யோகேஸ்வரி அவர்கள் கலந்துகொண்டார்.



# மேம்படுத்தப்பட்ட பயிற்சி செயற்றிட்டத்தின் இரண்டாம்கட்ட நிகழ்வு





வடக்குப் பிரதேசத்தின் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி செயற்றிட்டத்தின் இரண்டாம் படிமுறை கடந்த கார்த்திகை மாதம் 12ம் மற்றும் 13ம் திகதிகளில் கிளிநொச்சி நகரை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டதுடன், அவர்கள் முகங்கொடுக்கும் ஆண் - பெண் சமூகத்தன்மை தொடர்பான பிரச்சினைகள் தொடர்பாக இங்கு அதிக கவனம் செலுத்தப்பட்டது. இந்நிகழ்விற்கு வள ஏற்பாட்டாளராக திருமதி. கார்த்திகா தனஞ்சனா அவர்கள் கலந்து கொண்டார்.

# தொழிற்சங்க அனுபவப்பகிர்வு செயற்றிட்டம்



டாபிந்து கூட்டமைப்பினால் தொழிற்சங்க அமைப்பு அங்கத்தவர்களுடன் அனுவபவப் பகிர்வு செயற்றிட்டமானது கடந்த ஐப்பசி மாதம் 19ம் திகதி கட்டுநாயக்க டாபிந்து அலுவலகத்தில் இடம்பெற்றது. இங்கு கீழ்க் குறிப்பிட்ட விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

1. தற்போதைய நிலைமையில் தொழிற்சங்க அமைப்புக்களின் செயற்பாடு
2. அங்கத்தவத்தை மேம்படுத்த முகங்கொடுக்கின்ற சவால்கள்
3. ஏனைய பங்குதாரர்களுடன் தொடர்பாடலை வளர்த்துக் கொள்ளும் விதம்
4. ஊதிய வியாபாரம் மற்றும் தொழிலாளர் சட்ட உருவாக்கலுக்கு ஒத்துழைப்புடன் கூடிய வலையமைப்புடன் செயலாற்றும் விதம்
5. பெண்கள் தொழிற்சங்க அமைப்பு வலையமைப்பு சவால்கள்



# பொது சமையலறை










டாபிந்து கூட்டமைப்பினால் தொழிலாளர்கள் முகங்கொடுத்து கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடிக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட பொது சமையலறை செயற்றிட்டமானது கடந்த ஐப்பசி மாதம் 2ம் திகதி கிளிநொச்சியை மையமாக வைத்து மற்றும் 16ம் திகதி மற்றும் 23ம் திகதி கட்டுநாயக்கவை மையமாகக் கொண்டும், 30ம் திகதி வவுனியாவிலும் மேற்கொள்ளப்பட்டது. அத்தோடு கார்த்திகை மாதம் 6ம், 13ம் மற்றும் 20ம் திகதிகளில் கட்டுநாயக்க மற்றும் பியகமவை மையமாகக் கொண்டு



மேற்கொள்ளப்பட்டது. இங்கு பகலுணவிற்காக 600 இற்கும் மேற்பட்ட உணவுப் பொதிகள் வழங்கப்பட்டதுடன், அவை குறைந்த வருமானம் பெறும் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. தனித்தாய்மார்கள் ஐவரின் பங்களிப்பு இதற்காக வழங்கப்பட்டதுடன், டாபிந்து அலுவலக ஊழியர்களின் பங்களிப்பும் கிடைக்கப்பெற்றது. இதற்கான ஒத்துழைப்பு ஏசியா ஃளோர் வேஜ் அமைப்பின் மூலம் வழங்கப்பட்டது.

# போகஸ் குழு கூட்டம்

டாபிந்து கூட்டமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட குழு கலந்துரையாடலானது 2022ம் ஆண்டு ஐப்பசி மாதம் 19ம் திகதி பியகமவிலுள்ள திலிண ஹோட்டலில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு நிரந்தர மற்றும் தற்காலிக (மேன்பவர்) ஆகிய தொழில்பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்தி 16 ஊழியர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டமானது டாபிந்து கூட்டமைப்பின் நிர்வாக இயக்குனரான திருமதி. சமிளா துʻரி அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. இங்கு அவர்கள் முகங்கொடுக்கும் சில பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

- தற்காலிக (மேன்பவர்) ஊழியர்களின் ஒருநாளுக்கான கொடுப்பனவு மிகக்குறைவாக காணப்படுதல்.
- கிடைக்கும் ஊதியமானது அன்றாட வாழ்க்கைக்கு போதுமானதாக காணப்படாமை.
- இலக்குகள் அதிகரிக்கப்பட்டமை.
- வழங்குனர்களினால் ஆர்டர்கள் இரத்து செய்யப்படுதல்.
- தொழிற்சாலைகள் மூடப்படுதல்.
- மருந்தூட்டப்பட்ட நாப்கின்களை கட்டுப்படுத்தல் மற்றும் அவற்றை உபயோகிப்பதற்கு பத்திரம் வெளியிடுதல்.
- சுகாதார வசதிகளை வழங்குவதற்கும் தொழிற்சாலைகளில் தாதிகள் காணப்படாமை.
- ஒட்டுமொத்தமாக தற்போது தொழிற்சாலைகளில் விடுமுறை வழங்கப்படுவதாகவும், பெறப்படும் ஊதியமானது அன்றாட வாழ்க்கைக்கு போதாமலிருத்தல்.



# வெளிநாட்டுச் செய்தி

இந்தியாவின் தலைநகரமான டெல்லியில் அமைந்துள்ள பாதணி உற்பத்தி மற்றும் பொதியிடல் பிரிவில் கடந்த கார்த்திகை மாதம் 1ம் திகதி ஏற்பட்ட தீ விபத்தில் ஊழியர்கள் இருவர் உயிரிழந்ததுடன், எட்டு பேர் கடும் காயத்திற்குள்ளாகினர்.

ஊடக அறிக்கைகளின்படி, பாதணிகளில் உள்ளங்கால்களின் உற்பத்திக்காக பயன்படுத்தப்பட்ட பொலியுரேட்டின் இயந்திரத்தில் ஏற்பட்ட வெடிப்பு காரணமாக தீப்பிடித்துள்ளது. தீ ஏற்பட்ட போது தொழிற்சாலையில் 300 ஊழியர்கள் சேவையில் ஈடுபட்டிருந்ததுடன், பெரும்பாலானோர் தமது உயிரை காத்துக் கொள்வதற்காக கட்டிடத்திலிருந்து வெளியே பாய்ந்துள்ளனர்.

தீ வெடிப்பு ஏற்படுவதற்கு முன்பு, உடைந்த ஓர் இயந்திரத்தை பழுது பார்க்குமாறு ஊழியர்கள் கேட்டிருந்த போதிலும், தொழிற்சாலை உரிமையாளர்கள் எந்தவொரு முயற்சியும் மேற்கொள்ளவில்லை. அத்தோடு தீயணைப்பு திணைக்களத்தில் குறித்த சான்றிதழ் இல்லாமையினால் தொழிற்சாலை இயங்கியதுடன், அங்கு தீயணைப்பதற்கான எந்தவொரு உபகரணமும் இருக்கவில்லை.

நான்கு நாட்களுக்குப் பின்னர், இந்தியாவின் தலைநகரின் தொழிற்தறை பகுதியைப் போன்று மற்றுமொரு பாதணி தொழிற்சாலையிலும் தீப்பிடிப்பு சம்பவம் ஏற்பட்டுள்ளது. ஆனால் எந்தவொரு உயிரிழப்பு சம்பவமும் பதிவாகவில்லை.

இந்த தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெரும்பாலான தொழிலாளர்கள் தொலைதூர பகுதிகளில் இருந்து வருகைதருவதுடன், தொழிலாளர்கள் ஊடக மூலமாக கூறிநின்ற விடயம் யாதெனில், அவர்கள் மாதாந்தம் ரூ12,000 (U$$147) சம்பாதிப்பதுடன். நாளொன்றில் பத்து மணிநேரம் தொழிலில் ஈடுபடுவதாகவும் தெரிவித்தனர். காயமடைந்த தொழிலாளர்கள் மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு வருவதுடன், 24 வயதுடைய சோனு தாகூர் மற்றும் 20 வயதுடைய அபில் குமார் ஆகியோர் உயிரிழந்துள்ளனர். தொழிற்சாலையின் உரிமையாளர் மற்றும் ஒப்பந்தக்காரருக்கு எதிராக தற்போது பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றன.

இணையத்தினூடாக பெறப்பட்டது

1ஆம் பக்கத் தொடர்ச்சி **பெண் வன்முறைக்கு...**

**ஆனால் எவ்வாறாயினும் உங்களுக்கு தெரியுமா?**

- உலகம் முழுவதும் பெண்கள் மூவருள் ஒருவராவது உடல் ரீதியாகவோ அல்லது பாலியல் ரீதியாகவோ துன்புறுத்தலை அனுபவிக்க நேரிடுகிறது" பெரும்பாலும் நெருங்கிய ஒருவர் மூலமாக அனுபவிக்கின்றார்கள்.
- பூகோள ரீதியாக, பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளிடமிருந்து 35மூ எம்முறையிலும் உடல் அல்லது பாலியல் ரீதியாக துன்பறுத்தலுக்கு முகங்கொடுக்கின்றனர். சில நாடுகளில் இடம்பெயர்வு ஆவணங்கள் 70மூத்திதையும் அண்மித்துள்ளது.
- உலகம் முழுவதும் மக்கள் கடத்தலுக்கு ஆளானவர்களின் அரைப்பங்காக பெண்கள் காணப்படுகின்றனர்.
- உலகில் பெண்கள் 650 மில்லியன் மற்றும் 18 வயதிற்கு அதிகமான பெண்களை திருமணம் செய்யுமாறு வற்பறுத்துகின்றனர்.
- 30 நாடுகளில் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் 200 மில்லியன் எண்ணிக்கையானோர் பாலியல் துஃபிரயோகத்திற்கு ஆளாகியுள்ளனர்.
- 15 வயதிற்கும் 19 வயதிற்கும் இடைப்பட்ட 15 மில்லியன் பெண் பிள்ளைகள் அவர்களது வாழ்க்கையின் ஒரு சந்தர்ப்பத்திலாவது பலாத்காரமாக பாலியல் துன்புறுத்தலுக்கு முகங்கொடுத்துன்ளனர்.

இங்கு பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் அவர்களுக்கு எதிராக ஏற்படும் வன்முறை செயல்களுக்கு உதவியை நாடாமலிருப்பது பிளவுபட்ட விடயமாகும். உங்களுக்கு நடைபெறும் அனைத்து வன்முறைகளுக்கும் அதற்கு எதிராக முறையான படிமுறையை மேற்கொள்ள வேண்டும். வேலை உலகினுள் நடைபெறும் உடல், உள, பாலியல், பொருளாதார துன்புறுத்தல் மற்றும் வன்முறையை இல்லாதொழிப்பதற்கு ஊ190 சர்வதேச மாநாடு மற்றும் பரிந்துரை 2019ம் ஆண்டு உலக தொழிலாளர் அமைப்பினூடாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவ் மநாடுகள் இலங்கையில் அனுமதிக்கப்படுவதற்கு இலங்கை அரசாங்கம் முயற்சியெடுக்க வேண்டும். காரணம், நிகழ்காலத்தில் பெண்கள் பெரும்பாலும் துன்புறுத்தலுக்கு மற்றும் வன்முறைக்கு உள்ளாவதன் காரணம், பணியிடத்தில் இருப்பதனாலாகும். விசேடமாக வலயத்தினுள் பணிபுரியும் பெண்கள் பணியிடத்தில், பொது இடங்களில் மற்றும் தங்குமிடங்களிலும் கூட வன்முறைக்கு மற்றும் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்படுகின்றனர். அதனால் இம்மரபை பரிந்துரை செய்வது அவசியமாகும். எவ்வாறாயினும், உங்களுக்கு நடைபெறும் அனைத்து துன்புறுத்தல் மற்றும் வன்முறைகளுக்கு எதிராக எழுந்து நிற்பது உங்களுக்கு உரித்தான உரிமையாகும்.

சுரம்யா

(இணையத்தினூடாக எடுக்கப்பட்டது)

# எண்ணம்

“ஹலோ சோமா! நீ ஏன் பைத்தியக்காரியைப்போல் கட்டிலிலேயே கிடக்கின்றாய்? உன் காதலன் ஏமாற்றிவிட்டானா?”

“இல்லையப்பா, இந்த காலங்களில் மேலதிக நேர வேலை இல்லை. வேலைத்தளங்களை மூடப்போவதாக கேள்விப்பட்டோம். அவ்வாறு ஏதும் நிகழ்ந்தால் என்ன செய்வது? கடந்த நாட்களாக மேலதிக கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை. என்னிடம் இருந்த நகைகளை அடகுவைத்து தான் வீடடிற்கும் பணம் அனுப்பினேன். செலுத்தவதற்கென்று வாங்கிய பொருட்களுக்கு இன்னும் பணம் செலுத்தவில்லை. சேமித்துவைத்த எதுவும் இல்லை. மிகவும் சிரமப்பட்டு தான் இந்நாட்களில் வாழ்க்கையை கொண்டுநடத்துகின்றேன். கையில் ஒரு சதமாவது இல்லை. நம்பிக்கை நிதியம் தான் எமது மீட்பாளர். அதையும் பறிக்கப் பார்த்தார்கள். உனக்கும் நினைவிருக்குமே.”

“எப்படி நினைவில்லாமற்போகும், ஒரு கூட்டமாக தானே எமது ஆட்கள் களத்தில் இறங்கினர். நானும் சுசந்திகாவைப் போன்று ஓடியதால் பிழைத்துக் கொண்டேன். இல்லையெனில், எனது எலும்புகளும் முறிந்திருக்கும். 1980களிலும் வர்த்தக வலயத்தில் பல்வேறு போராட்டங்கள் நடைபெற்றதாமே, அப்போது ஏன் காணாமலாக்கப்படுகின்றனர்? முன்னைய காலத்தில் அவ்வாறு தான் தொழிலாளர்களை கவனித்தார்கள். ஆனால் தற்போதைய தொழிலாளர்கள் விழிப்பணர்வூட்டப்பட்டிருக்கின்றார்கள். முன்பு போல நொறுங்கி, வதைக்கப்பட்டு வேலை செய்ய முடியாது. உடலை நன்கு வருத்திக் கொண்டு நாட்டிற்கு டொலர் பெற்றுத் தரும் எமக்கு எந்தவொரு மதிப்பும் வழங்கப்படவில்லை. வலயத்தினுள் வாழ்ந்துக்கொண்டிருக்கும் நாம் அதே துன்பத்தைத் தான் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். அது இல்லை சோமா,, வேலை முடிந்து வரும் வழியில் ரத்தொழுவ சந்தியில் பெற்றோர்கள் சிலர் தமது பிள்ளைகளின் புகைப்படங்களை வைத்துக் கொண்டு அழுது கொண்டிருப்பதைப் பார்த்தேன்.

“ஏன் உனக்குத் தெரியாதா? இன்று ஐப்பசி மாதம் 27ம் திகதி, காணாமற்போனோரின் நினைவுதினம் தானே, கடந்த 23 ஆண்டுகளாக பெற்றோர்கள் தமது காணாமற்போன பிள்ளைகளை நினைவுகூர்ந்து. தம் பிள்ளைகளை தேடித் தரும்படி அரசிற்கு எதிராக போராட்டம் நடத்துவார்கள்”.

“ஐயோ, நாம் இருவரும் ஒரே படகில்தான் அகப்பட்டிருக்கின்றோம். அது இல்லை சோமு, எம்மை ஒரு பொருளாக தானே இங்கிருக்கும் சிலர் எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். நேற்று மாலை நான் வேலைமுடிந்து வரும்போது எங்கிருந்தோ இருந்து வந்த மெல்லிய குச்சி போன்ற ஒரு மனிதன் எனது பின்பக்கத்திற்கு ஓங்கி அடித்தவாறு அவனது பின்பக்கத்தை காட்டிக் கொண்டு சென்றான். காலையிலிருந்து உட்கார்ந்தவாறே மெீனில் வேலைசெய்து இடுப்புப் பகுதி விறைத்து போய்விட்டதால் இருக்க முடியாமல் இருந்தேன். இல்லையெனில், நான் நன்றாக அவனை வெளுத்து விட்டிருப்பேன்”.

ஏன், நான் காலையில் வேலைக்கு ஓடோடிச் செல்லும் போது எங்கிருந்தோ வந்த ஒருவன் , ஹலோ தங்கச்சி, சட்டை ஏன் இந்தளவுக்கு பிளந்திருக்கின்றது? மிகுதிப் பகுதியை தைப்பதற்கு நூல் போதாமல் போய்விட்டதா? என்றதும் எனக்கு கடுங்கோபம் வந்தது. இவ்வாறான கதைகளையெல்லாம் போய் வெளியே இருக்கும் ிப்பர் மேன்களுக்கு சொல் என்று நான் கூறினேன்.இம்மாதம் வன்முறை தின கொண்டாட்டத்திற்கு எம்மால் சுதந்திரமாக தொழில்செய்து இந்த பூமியில் வாழ முடியாது. ஆனால் தின கொண்டாட்டங்கள் மட்டும் சரியாக இடம்பெறுகின்றன. முறைகேடின்றி இடம்பெறுகின்றது. பாதுகாப்பு அதிகம், தொழிலாள்கள் குறைவு என்றார்களாம்.

# பெண் எனும் விந்தை

மழலையாய் இருந்து
மடியில் தவழ்ந்து
மனதைக் கொள்ளை
கொள்வாள் பெண்மங்கை!

தத்தித் தவழ்ந்து
தத்தை மொழிபேசி
தனக்கென ஓர்
தனிக்கூட்டம் சேர்ப்பாள்!

சின்னஞ்சிறு சிறுமியாய்
சிறிது வளர்ந்து
சிறுசிறு குறும்புகளால்
சிறைபிடிப்பாள் அவள்!

பருவ வயதில்
காளையர் மனதை
கொள்ளை கொள்ளும்
கன்னியாய் வட்டமிடுவாள்!

சஸ்கா

# சிங்கப் பெண்ணே!

சிங்கப் பெண்ணே!
பூவாசல் திறந்து கொண்டு
பூவுலகை பார்ப்பதற்குள்
கள்ளிப்பாலை ஏந்திக்கொண்டு
கிழவியவள் காத்திருப்பாள்

கள்ளிப்பாலை தாபித்து
தாய்ப்பாலை அருந்துகையில்
முதல் போராட்டத்தில்
வெற்றி வாகை சூடியவள்

பெண்ணே கள்ளிப்பாலில் இருந்து
காப்பாற்றிய உன்னை சிலர்
காமப்பசிக்கு இரையாக்குவது
முறைகேடு எழுது தெரியவில்லை

ரூபி

# பெண்

குழந்தையில் அநியாயப்படுத்துவதில் இருந்தே
இந்த உலகத்தின் கழுகு
பார்வையும் மிருவேலையும்
தொடங்கிவிட்டன!

ஈ எறும்பு அண்டாம
இமை போல காத்தது
உன்னுள் இருக்கும்
இச்சையை அழிக்கத்தான்

காம இச்சைக்கு அலையும்
கொச்சை இனமே – என் பிள்ளையை
பத்து மாதம் சுமக்கையில்கூட எனக்கு வலிக்கவில்லை
பத்து நொடியில் சிதைத்து விட்டாயே

உன்னை தண்டிக்க இங்கு
யாரும் இல்லையென நினைக்கையில்தான்
பாரம் தாங்காமல் என் இதயம்
வெடிப்பதை போல் உணர்கிறேன்

எஞ்சிய வாழ்வெல்லாம் இப்பிஞ்சுகளின்
இழந்த பெற்றோரின் மனம்
தீயில் வெந்து தினம் தினம் நொந்த
அவர்களுக்கு ஆறுதல் தான் என்ன?

தன்னை ஈண்டவளுக்கும் தன்னுடன் பிறந்தவளுக்கும்
தன்கருவை சுமந்தவளுக்கும் பெயர்தான் - பெண்
என்பதை மறந்துவாழும் - ஈனப்பிறவிகளே
இனியாவது திருந்தி வாழுங்கள்.

ஏஞ்சல்

# அம்மா

உடல் தந்தாய் அம்மா
அதனால் உயிர் தந்தாய்
உதிரத்தில் முந்நூறு நாள் சுமந்தாய்
நிறையன்பை நீ தொழிந்தாய்

பாலமுது நீயளித்ததாய்
பஞ்சணையில் துயில வைத்தாய்
பக்குவமாய் நான் வளர
நீயே ஊக்குவித்தாய்

தாயிற்சிறந்த கோயிலுமில்லையென
உன் வாழ்வின் அனுபவத்தின் மூலம்
எமக்குக் காண்பித்து விட்டாய்
உன் அன்பிற்கு வேறெதுவும் ஈடாகுமா?


பிரியந்தினி

தொழிலாளர் செய்தி

# நெருக்கடிக்கு மத்தியில் நெருக்கடிக்குள்ளான ஆடைத் தொழிற்பிரிவு

வடக்கில் ஆடைத்தொழிற்சாலையினுள் இடம்பெறும் வன்முறைகள் மற்றும் துன்புறுத்தல்கள் தற்போது மிய தீவிரமாக அதிகரித்துள்ளது. விசேடமாக ஆட்சியை கைப்பற்றிய அதிகாரிகள் மூலம் கடுமையான துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்படுகின்றனர். டாபிந்து கூட்டமைப்பாகிய எமக்கு அறியவந்த விடயம் யதொனில், வடக்கில் ஓர் தொழிற்சாலையினுள் அதிகாரத்தை கைப்பற்றிய ஒரு நபரின் மூலம் தனது இரகசிய உறுப்புக்களை பெண் பணியாளரிடம் காண்பித்திருப்பது, அப்பெண்ணுக்கு வழங்கப்பட்ட இலக்கை (டார்க்கட்) அடையமுடியாமையினாலாகும். அத்தோடு மற்றுமொரு பெண் பணியாளர் தாங்கமுடியாத மனஅழுத்தத்திற்கு முகங்கொடுத்தமையினால் அவள் அவளது கையை காயப்படுத்தியிருந்தார். மேலும் விசேடமாக தமது இலக்கை (டார்க்கட்டை) அடைந்து கொள்வதற்காக வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் ஊழியர்கள் போதைவஸ்து பாவனைக்கும் உட்படுத்தப்பட்டிருப்பதாக எமக்குத் தெரியவந்தது. அத்தோடு தற்கால பொருளாதார நிலைமையின் மத்தியில் ஆடைத்தொழிற்சாலை தொழிலாளர்கள் தமது தொழிலை இழந்து அச்சுறுத்தலுக்கு முகங்கொடுக்கின்றனர்.

எவ்வாறாயினும், வேறு நாடுகளில் அதிகளவான டொலர் வருமானத்தை ஈட்டிக் கொடுக்கும் இவ் ஆடைத் தொழிற்சாலையில் தொழில்புரியும் தொழிலாளர்கள் தற்போது பல மாதங்களாக தொழிலின்றி வீடுகளில் இருந்து வருவதுடன், தமது மாத சம்பளத்தின் அடிப்படை சம்பளம் மட்டுமே கிடைக்கப்பெற்று அதன் மூலம் வாழ்க்கையை கொண்டு நடத்துகின்றனர். துன்புறுத்தலுக்கு உள்ளாகி, வாழ்வதற்கும் முறையான ஊதியமற்று காணப்படும் இம் மக்கள் தொடர்பாக கவனம் செலுத்தி பொறுப்புக் கூற வேண்டியவர்கள் கவனியாது இருப்பது ஏன்? என்பது பிரச்சினையாகவுள்ளது.



இல, 221, வெலபட வீதி, கட்டுநாயக்கவை வசிப்பிடமாகக் கொண்ட எச்.ஐ.சமன்மலி ஆகிய என்னால் ரத்வெகி அச்சகத்தில் அச்சிடப்பட்டது.